**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி</u>**

முன்னிலை: திரு.G.பாண்டியராஜன், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை
நடுவர், கொடுமுடி.

2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10ம் நாள் செவ்வாய்கிழமை

**<u>CMP No.176/2025</u>**
**<u>CNR No.TNED 13-000896-2025</u>**
**<u>in</u>**
**<u>M.C.No.7/2022</u>**

N.கலைச்செல்வி, வயது 25, க/பெ.K.சுரேஷ்குமார்,
த/பெ.நாச்சிமுத்து,
கோட்டைபுதூர், அம்மன் கோவில்,
சிவகிரி வழி, கொடுமுடி வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

- மனுதாரர்/மனுதாரர்

//எதிராக//

K.சுரேஷ்குமார், வயது 23, த/பெ.கருப்புசாமி,
மேட்டுர், சூலப்புரம்,
மல்லபுரம் கிராமம்,
வேடச்சந்தூர் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்

- எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 10.03.2026ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.சி.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரை, ஆவணங்களை பரிசீலனை செய்து இவ்வழக்கில் இந் நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

மனு தாக்கல் தேதியான 01.11.2022ம் தேதி முதல் 07.09.2025ம் தேதி வரையிலான 35 மாதங்களுக்கான ஜீவனாம்ச தொகை ரூ.2,80,000/-ஐ

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.10 17:27:31 +0530

எதிர்மனுதாரரிடமிருந்து வசூல் செய்ய உத்தரவிடக் கோரியும், மனுதாரருக்கு சொந்தமான பீரோ, கட்டில் மற்றும் சீர்வரிசை பொருட்களை எதிர்மனுதாரர் மனுதாரருக்கு திருப்பி கொடுக்க உத்தரவிடக் கோரியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **<u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு உறுதி கூற்றின் சுருக்கம்</u>**:-

மனுவில் மனுதாரர். ஜீவனாம்ச மனுவில் மனுதாரர். மனுதாரர் தாக்கல் செய்திருந்த ஜீவனாம்ச வழக்கில் எதிர்மனுதாரர் மாதம் ஒன்றுக்கு தனக்கு மாதம் ஒன்றுக்கு மாதம் ரூ.8,000/- வீதம் மனு தாக்கல் தேதி முதல் வழங்க வேண்டும் எனவும், மேற்படி தொகையை எதிர்மனுதாரர் மனுதாரருக்கு உத்தரவு தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அஞ்சல் வழியாகவோ அல்லது வங்கி கணக்கு மூலமாகவோ அல்லது நேரிலோ செலுத்திட வேண்டும் என்றும், மனுதாரருக்கு சொந்தமான பீரோ, கட்டில் மற்றும் சீர் வரிசை பொருட்களை ஒரு மாத காலத்திற்குள் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு திருப்பி கொடுக்க வேண்டும் என்றும் 07.08.2025ம் தேதி உத்தரவிட்டிருந்தது. ஆனால் எதிர்மனுதாரர் இதுவரை நீதிமன்ற உத்தரவுப்படி ஜீவனாம்ச நிலுவை தொகையை செலுத்தவில்லை. மேலும் நீதிமன்ற உத்தரவுபடி தனக்கு சொந்தமான பீரோ, கட்டில் மற்றும் சீர் வரிசை பொருட்களை எதிர்மனுதாரர் திருப்பி கொடுக்கவில்லை. மனு தாக்கல் தேதியான 01.11.2022ம் தேதி முதல் மனுவின் உத்தரவு தேதியான 07.08.2025ம் தேதி வரையான 35 மாதங்களுக்கான ஜீவனாம்ச தொகை ரூ.2,80,000/-ஐ மனுதாரருக்கு எதிர்மனுதாரர் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரர் இதுவரை நீதிமன்ற உத்தரவுப்படி மனுதாரருக்கு ஜீவனாம்ச தொகையை செலுத்தவில்லை. மேலும் பீரோ, கட்டில் மற்றும் சீர்வரிசை பொருட்கள் ஆகியவற்றை திரும்ப கொடுக்கவில்லை. ஆகவே மனு தாக்கல் தேதியான 01.11.2022ம் தேதி முதல் 07.09.2025ம் தேதி வரையான 35 மாதங்களுக்கான ஜீவனாம்ச தொகை ரூ.2,80,000/-ஐ எதிர்மனுதாரரிடமிருந்து வசூல் செய்ய உத்தரவிடக் கோரியும், மனுதாரருக்கு சொந்தமான பீரோ, கட்டில் மற்றும் சீர்வரிசை பொருட்களை எதிர்மனுதாரர் மனுதாரருக்கு திரும்ப கொடுக்க உத்தரவிடக் கோரியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.10 17:27:59 +0530

2. எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

3. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதே ஆகும்.

4. மனுதாரர் மனு தாக்கல் தேதியான 01.11.2022ம் தேதி முதல் 07.09.2025ம் தேதி வரையிலான 35 மாதங்களுக்கான ஜீவனாம்ச தொகை ரூ.2,80,000/-ஐ எதிர்மனுதாரரிடமிருந்து வசூல் செய்ய உத்தரவிடக் கோரியும், மனுதாரருக்கு சொந்தமான பீரோ, கட்டில் மற்றும் சீர்வரிசை பொருட்களை எதிர்மனுதாரர் மனுதாரருக்கு திரும்ப கொடுக்க உத்தரவிடக் கோரியும் மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார்.

5. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் வழக்கில் ஆஜராகி எதிர் உரை தாக்கல் செய்து தனது தரப்பு வாதத்தை முன்னிறுத்தப்படவில்லை. வழக்காவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது மனு தாக்கல் தேதியான 01.11.2022ம் தேதி முதல் 07.08.2025ம் தேதி வரையான 33 மாதங்களுக்கான ஜீவனாம்ச தொகை ரூ.2,64,000/- ஐ எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த வேண்டுமென்றும், மேலும் மனுதாரருக்கு சொந்தமான பீரோ, கட்டில் மற்றும் சீர்வரிசை பொருட்களை எதிர்மனுதாரர் மனுதாரருக்கு திரும்ப கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும் முடிவு செய்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக**, மனு தாக்கல் தேதியான 01.11.2022ம் தேதி முதல் 07.08.2025ம் தேதி வரையிலான 33 மாதங்களுக்கான ஜீவனாம்ச தொகை ரூ.2,64,000/-ஐ எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த வேண்டுமென்றும், மேலும் மனுதாரருக்கு சொந்தமான பீரோ, கட்டில் மற்றும் சீர்வரிசை பொருட்களை எதிர்மனுதாரர் மனுதாரருக்கு திரும்ப கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.10 17:28:08 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.10 17:28:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள்</u>**:– – இல்லை –

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள்</u>**:– – இல்லை –

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.10 17:28:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.